*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2025** **16 மே, 2025**

**<u>பத்திரிகை செய்தி</u>**

புதுச்சேரி காவல்துறை சார்பில் புதிய குற்றவியல் சட்டங்கள் தொடர்பான தடயவில் வாகன கண்காட்சியை மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K.கைலாசநாதன் கொடியசைத்து தொடங்கி வைத்தார். வாகனத்தில் காட்சிப்படுத்தப்பட்ட உயர் தொழில்நுட்ப தடயவியல் கருவிகளை பார்வையிட்டார்.

கடற்கரை சாலை காந்தி சிலை அருகில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாண்புமிகு முதலமைச்சர் ந.ரங்கசாமி, மாண்புமிகு உள்துறை அமைச்சர் திரு ஆ. நமச்சிவாயம், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு க.லட்சுமிநாராயணன், புதுச்சேரி காவல்துறை தலைமை இயக்குனர் திருமதி ஷாலினி சிங், உள்துறை சிறப்புச் செயலர் திரு கேசவன், காவல்துறை உதவி தலைமை ஆய்வாளர் திரு சத்தியசுந்தரம் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியின்போது, புதிய குற்றவியல் சட்டங்களின் நடைமுறைப்படி மோப்ப நாய்களின் உதவியுடன் வெடிகுண்டு கண்டறிதல் மற்றும் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் போதைப் பொருளை கண்டறியும் செயல்முறை நிகழ்த்தி காட்டப்பட்டது. மோப்ப நாய்களின் சாகசங்களும் காவலர்களின் ஆணைக்கு கட்டுப்படும் ஒழுக்க நடைமுறையும் அங்கிருந்த அனைவரின் பாராட்டையும் பெற்றது.